# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 20.08.2018 | **1)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி சத்திரம் தெரு பகுதியில் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக ரூ. 43,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 27.03.2018 அன்று ஒப்பந்தப்புள் கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 27.03.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1. திரு. I. Jeyaseelan<br>மதிப்பீட்டை விட 0.19% குறைவு (ரூ.42,26,229.24)<br>2. திரு. S. Innasimuthu<br>மதிப்பீட்டை விட 0.22% அதிகம் (ரூ.4243678.20)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினைவிட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. I. Jeyaseelan என்பவரின் (மதிப்பீட்டை விட 0.19% குறைவு (ரூ.4226229.24) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மதிப்பீட்டை விட 0.19% குறைவாக கொடுத்த திரு. I. Jeyaseelan ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File No: E1/01158/2015 | **133)** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மனிதகுழி மூடிகள் அனைத்தையும் சாலை மட்டத்திற்கு உயரம் கூடுதலாக கட்டும் பணிக்காக ரூ 3300000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 31.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 31.07.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1. திரு. J. Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 0.56% குறைவு (ரூ. 28,89,570.00)<br>2. திரு. T. Murugan<br>மதிப்பீட்டை விட 1.77% அதிகம் (ரூ. 29,57,250.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. J. Suresh Jeyakumar என்பவரின் (மதிப்பீட்டை விட 0.56% குறைவு (ரூ. 28,89,570.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டைவிட 0.56% குறைவாக கொடுத்த திரு. J. Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/02384/2018 | 134)அலுவலகக் குறிப்பு 1 மற்றும்2 அனுமதிக் கப்பட்டது. |
| | 3) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் மூலம் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு மற்றும் மலேரியா போன்றவற்றினை தடுக்கும் பொருட்டு மாநகரப் பகுதிகளில் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு புகை மருந்து இயந்திரங்கள் மூலம் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. மேற்படி புகை மருந்து அடிப்பதற்கு நிரந்தர பணியாளர் பற்றாக்குறை காரணமாக போதிய மாநகராட்சி பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் Fogging Machine கொண்டு புகை அடிப்பதற்கு 20 நபர்களையும் பிரிவு அலுவலகங்கள் மற்றும் மண்டல அலுவலகங்களில் கணினியில் பதிவு செய்வதற்கு 16 நபர்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதித்த ரூ 320/– ஊதியத்தில் சுய உதவிக்குழுக்கள் மூலம் ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ள அனுமதியும் மற்றும் மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் ரூ 42.00 லட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/8776/12 | 135) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி நெடுஞ்சாலைப் பகுதி எட்டையாபுரம் சாலையில் மத்திய பகுதியில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்களுடன் LED மின் ஆற்றல் சேமிப்பு விளக்குகள் பொருத்தும் பணிக்காக ரூ 1,00,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 07.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/s. Kumaran Industries மதிப்பீட்டை விட 9.02 % குறைவு (ரூ. 1,04,98,770,00)<br>2) M/s Sriram Electricals மதிப்பீட்டை விட 14.12 % அதிகம் (ரூ. 1,09,90,030.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீடு கொடுத்துள்ள M/s. Kumaran Industries என்பவரின் (மதிப்பீட்டை விட 9.02% குறைவு (ரூ. 1,04,98,770,00) ஒப்பந்தப்புள்ளியுடம் விலை குறைப்பு கோரப்பட்டது.<br>1. M/s. Kumaran Industries மதிப்பீட்டை விட 3.50% அதிகம் (ரூ. 99,66,770.00)<br><br>M/s. Kumaran Industries என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விம 3.50% அதிகம் (ரூ. 99,66,770.00) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.7.2–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5 % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.50% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 3.50 %அதிகமாக கொடுத்த M/s. Kumaran Industries ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (SI/1) | 136) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 5) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி பிரதான சாலையின் மத்திய பகுதியில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்களுடன் LED மின் ஆற்றல் சேமிப்பு விளக்குகள் பொருத்தும் பணிக்காக ரூ 75,00,000/– மதிப்பீட்டில் தாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 07.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/s. Kumaran Industries மதிப்பீட்டை விட 11.80 % குறைவு (ரூ. 78,71,658.00)<br>2) M/s Sriram Electricals மதிப்பீட்டை விட 16.98 % அதிகம் (ரூ. 82,29,795.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீடு கொடுத்துள்ள M/s. Kumaran Industries என்பவரின் (மதிப்பீட்டை விட 11.89% அதிகம் (ரூ.78,71,658.00) ஒப்பந்தப்புள்ளியிடம் விலை குறைப்பு கோரப்பட்டது.<br><br>1) M/s. Kumaran Industries மதிப்பீட்டை விட 3.49% அதிகம் (ரூ. 72,80,918.00)<br>M/s. Kumaran Industries என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விம 3.49% அதிகம் (ரூ.72,80,918.00) பொறியியல் கயேடு பிரிவு II விதி எண் 2.7.2–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5 % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.50% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 3.49 %அதிகமாக கொடுத்த M/s. Kumaran Industries ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (SI/2) | 137) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 34 முதல் 47 வரை உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் மனித குழி மூடிகள் அனைத்தையும் சாலை மட்டத்திற்கு உயரம் கூடுதலாக கட்டும் பணிக்காக ரூ. 45,00,000/— மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 11.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 31.07.2017 அன்று திறக்கப்பட்டது.<br>1. திரு. K. Suresh Kumar<br>மதிப்பீட்டை விட 4.05% அதிகம் (ரூ. 38,56,550.00)<br>2. திரு. T. Murugan<br>மதிப்பீட்டை விட 4.69% அதிகம் (ரூ. 38,80,110.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக தொகை கொடுத்துள்ள திரு. K. Suresh Kumar என்பவரின் (மதிப்பீட்டைவிட 4.05 % அதிகம் (ரூ. 38,56,550.00) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. ஒப்புநோக்கு பட்டியல்<br>1)திரு. K. Suresh Kumar<br>மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ 36,87,441.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. K. Suresh Kumar என்பவரின் மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ 36,87,441.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 0.51% குறைவாக கொடுத்துள்ள திரு. K. Suresh Kumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/2707/2018 | 138) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 7) அரசு தனது அரசாணை எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. IV) நாள் 19.07.2018ல் சென்னை உயர்நீதி மன்றத்தால் 17.07.2018 அன்று ரிட் மனு எண். 2730/2018 ன் மீது பிறப்பிக்கப்பட்டுள்ளதீர்ப்புரையின் அடிப்படையில் 1.4.2018ம் முதலாம் அரையாண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொது சொத்து வரி திருத்தத்தினை கீழ்க்கண்ட அட்டவணைப்படி உள்ளாட்சி அமைப்புகளின் சட்டப்படி நிர்ணயம் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது. | 139) பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ.எண்</td><td>விவரம்</td><td>உத்தேசிக்கப்பட்ட மனு சொத்து வரி நிர்ணயம்</td></tr>
<tr><td>1</td><td>குடியிருப்புக்கான கட்டிடங்கள்</td><td>50 சதவீதத்திற்கு மிகைப்படாமல்</td></tr>
<tr><td>2</td><td>வாடகைக்கு விடப்பட்டுள்ள குடியிருப்பு கட்டிடங்கள்</td><td>100 சதவீதத்திற்கு மிகைப்படாமல்</td></tr>
<tr><td>3</td><td>குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்</td><td>100 சதவீதத்திற்கு மிகைப்படாமல்</td></tr>
</table>
தவிர இது தொடர்பான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனியாக வெளியிடப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
8) அரசாணை எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018ல் 1.4.2018 முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் வாடகைக்கு விடப்பட்ட குடியிருப்புகள் பொருத்தமட்டில் 100 சதவீதம் மிகாமல் சொத்து வரி உயர்வு செய்ய ஆணையிடப்பட்டது.<br>
இந்நிலையில் இதனை தொடர்ந்து வெளியிட்ட அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ல் பல்வேறு குடியிருப்போர் நல சங்கத்தினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிகைகளில் வாடகைக்கு விடப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு 100 சதவீத சொத்து வரி உயர்வு என்பது குடியிருப்போர் மற்றும் சொத்தின் உரிமையாளர்களுக்கு அதிக சுமையாக அமையும் என்பதால் குடியிருப்பு கட்டிடங்களுக்கு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு 50 சதவீதம் சொத்து வரி உயர்வினை இதற்கும் அமுல்படுத்திட கோரியதைனை அரசு பரிசீலனை செய்து 19.07.2018ம் நாளைய அரசாணை எண். 73 க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.<br>
திருத்தம்<br>
அரசாணை எண். 73 நாள் 19.07.2018ல் பத்தி எண். 4ல் கண்டுள்ள பட்டியலில் குடியிருப்புக்கு விடப்பட்ட கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமல் என்பதை நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>
இவ்வரசாணை மாமன்றத்தில் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td>
<td>140)பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 9) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண்.88 நாள் 06.10.2017இல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத்தீர்மானப்படி வார்டு எண்.5 எட்டயபுரம் ரோடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் பாதாள சாக்கடை கழிவுநீர் பண்ணை பகுதியில் நுண்உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு கட்டுமான பணி மேற்கொள்ள முற்பட்டபோது மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் கட்டுமான பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டு இம்மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண்.65 நாள் 28.03.2018 அன்று மாற்று இடமான இம்மாநகராட்சிக்கு சொந்தமான சங்கரப்பேரி ஜோதிநகர் மனைப்பிரிவுஎண். LP/R(TK)No. 10/88ல் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது.<br>மேற்கண்ட நுண்உரம் செயலாக்கம் மையம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளில் நிதி ஒதுக்கீடு வரப்பெற்ற இடப்பிரச்சினை காரணமாக நிலுவையில் இருந்து வருகின்றபடியால் திட்டப்பணியினை விரைந்து செயல்படுத்த ஏதுவாக தற்போது வார்டு எண்.6 சுந்தரவேல்புரம் மேற்கு (அம்பேத்கர் நகர்) பகுதியில் ஏற்கனவே செயல்பட்டு வரும் நுண் உரம் செயலாக்க மையத்தின் தெற்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் போதிய இடம் இருந்து வருவதாலும், வார்டு எண்.5க்கு அருகில் அம்பேத்கர் நகர் நுண்உரம் செயலாக்க மையத்தின் அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடத்தில் நுண்உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் அதே ஒப்பந்த விகிதத்தில் அதே ஒப்பந்தகாரர் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் இம்மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண். 65 நாள் 28.03.2018 அன்று சங்கரப்பேரி ஜோதிநகர் மனைப்பிரிவு எண். LP/R(TK)No. 10/88ல் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளதை இரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – அ) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ஆ)மாமன்றம் இரத்து செய்யலாம்<br>இ1/1158/2015 (ம.ப.எண்.119/17–18) | 141) அலுவலகக் குறிப்பு அ அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு ஆ இரத்து செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **10)** முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் தலைமையில் 01.09.2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண். 11ல் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண், 88 நாள் 06,10,2017இல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத் தீர்மானப்படி வார்டு எண். 1 சங்கரப்பேரி (பண்டாரம்பட்டி அருகில்) உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் பணிக்கு இடம் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேகொள்ள முற்பட்டபோது, மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் தொடர் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது.<br>மேற்படி சங்கரப்பேரி (பண்டாரம்பட்டி அருகில்) பகுதியினை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணியினை இம்மாநகராட்சி வார்டு எண்.3 எட்டையாபுரம் ரோடு மச்சாது நகர் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண். 116/91 பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் அதே ஒப்பந்த விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(இ1/1158/2015 (ம.ப.எண். 132/17–18) | **142)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **11)** முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, அவர்களின் தலைமையில் 01.09.2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநிர உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண். 11ல் திடக்கரீவு மேலாண்மை பணிகளில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண்.88 நாள் 06.10.2017இல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத் தீர்மானப்படி வார்டு எண்.3 மீளவிட்டான் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நுண்உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு இடம் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ள முற்பட்டபோது, மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் தொடர் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. | **143)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேற்படி மீளவிட்டான் பகுதியினை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டுவதற்கு எதிர்வு தெரிவித்ததால், மேற்படி நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணியினை இம்மாநகராட்சி வார்டு எண்.3 எட்டையாபுரம் மச்சாது நகர் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண். 116/91 பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் அதே ஒப்பந்த விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1158/2015 (ம.ப.எண்.131/17–18) | |
| | 12) இம்மாநகராட்சி தெற்கு மண்டலம் 52வது வார்டு சூசை நகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டப் பணியின் மூலம் 9.80 லட்சம் மதிப்பீட்டில் சமூதாய கழிப்பிடம் கட்டுவதற்கு வேலை உத்திரவு திரு. செய்யது சிராஜுதின் அவர்களுக்கு 16.12.2017ல் வழங்கப்பட்டு அஸ்திவாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி பகுதி Loss soil ஆக இருப்பது கண்டறிப்பட்டு அதனால் மேற்படி கட்டிடத்திற்கு அஸதிவாரத்தின் ஆழத்தை அதிகரிக்கவும் மற்றும் கூடுதலாக Ralf Foundation மேற்கொள்ளவும் செயற் பொறியாளர் தனது தல ஆய்வு அறிக்கை 03.01.2018ல் வழங்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அளவீடு செய்ததில் மொத்த செலவீனம் ர 11,41,750.62/– ஆக கணக்கீடு செய்யப்பட்டது.<br>இப்பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 9.80 இலட்சம் ஆகும். தற்போது செலவீனத்தொகை ரூ. 1141750.62/–க்கு மேற்கொள்ளப்பட்டது. எனவே பணியின் நிலையை கருதி மேற்கொள்ளப்பட்ட கூடுதல் செலவீனத்தொகை ரூ. 161750.62/–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பணியின் தன்மையை கருத்தில் கொண்டு மாமன்றம் கூடுதல் செலவீனத் தொகை ரூ 1,61,750.62ஐ அங்கீகரிக்கலாம்.<br>இ1/4566/2017 | 144. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 20.08.2018